O.S.107 -2024

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.107/2024

வாதி தரப்பு 1வது சாட்சி சந்திரசேகரன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சந்திரசேகரன் | வயது | : | 63/2026 |
| தகப்பனார் பெயர் | : | ராமையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | ரியல் எஸ்டேட் |

நாள்-02.06.2026

வா.சா.1

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் கடன் கொடுத்த காலத்தில் 1ம் பிரதிவாதி எலக்ட்ரானிக் தொழில் செய்து வந்தார். அவரது அலுவலகம் கீழராஜவீதியில் இருந்தது. அவரது அலுவலகத்திற்கு ஒரு முறை போயிருக்கிறேன். கடன் கொடுப்பதற்கு முன்பு அவரது அலுவலகத்திற்கு சென்றேன்.

2) கோவிட் காலக்கட்டத்தில் 1ம் பிரதிவாதி கடையை மூடிவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

3) நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் 1ம் பிரதிவாதிக்கு எந்த தொழிலும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

4) நான் வட்டிக்கு கடன் கொடுத்து தொழில் செய்கிறேன் என்றால் இல்லை.

5) நான் வட்டிக்கு கடன் கொடுப்பது இல்லை. யாராவது பணம் தேவை என்று கேட்டால் பணம் கொடுத்துவிட்டு வாங்கிவிடுவேன்.

6) நான் சின்னக்கண்ணு என்பவருக்கு எதிராக நான் கொடுத்த பணத்தை திரும்ப வசூல் செய்வதற்காக புதுக்கோட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.220/2021 என ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சின்னக்கண்ணு எனக்கு ரூ.15,00,000/- தர வேண்டும் என்று அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த கடனை நான் சின்னக்கண்ணுவிற்கு 2020-2021 வருடத்தில் கொடுத்தேன்.

7) கடனுறுதி சீட்டு நான் கொடுத்த பணத்தின் பாதுகாப்பிற்காக எழுதி வாங்கிகொள்வேன்.

8) வா.சா.ஆ.4ஐ என் வீட்டில் வைத்து 1ம் பிரதிவாதி கையெழுத்து போட்டு கொடுத்தார். அதில் 1ம் பிரதிவாதியின் மனைவி சாட்சி கையெழுத்து போட்டு கொடுத்தார்.

9) வா.சா.ஆ.4ல் உள்ள கையெழுத்து 1ம் பிரதிவாதியின் கையெழுத்துதான். அதை கைரேகை நிபுணருக்கு அனுப்பலாமா என்றால், உங்களுக்கு தேவைப்பட்டால் அனுப்பிக்கொள்ளுங்கள்.

மு.மா.நீ.,

10) 1ம் பிரதிவாதி வசதியானவர் என்பதால் அவரை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

11) 1ம் பிரதிவாதி எந்தவொரு கடனும் என்னிடம் கேட்கவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும், அதனால் நான் கேட்கின்ற பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.